செய்தி வெளியீடு எண்—509 நாள்—11.8.2007

## தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் தமிழக அமைச்சரவையின் இருபத்தொன்றாவது கூட்டம் இன்று(11.8.2007) தலைமைச் செயலகத்தில் உள்ள அமைச்சரவைக் கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது. அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் பின்வருமாறு :—

1. தமிழக அரசு சார்பில் கேபிள் டி.வி இணைப்புகள் வழங்குவதற்கென தனியே ஒரு நிறுவனத்தை அமைத்து, அந்த நிறுவனத்தின் மூலம் கேபிள் தொலைக்காட்சியில் கட்டண அலைவரிசைகளைப் பார்க்கும் ஏற்பாட்டு முறை (Conditional Access System) நடைமுறையில் உள்ள சென்னைப் பெருநகரப் பகுதியில் பன்முக ஏற்பாட்டு முறை ஆபரேட்டராகவும்(Multi System Operator); தமிழகத்தின் பிற பகுதிகளில் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டராகவும் செயல்படுவதென்றும்; இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

2. வெளிச்சந்தையில் பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை, மைதா ஆகியவற்றின் விலை உயர்ந்து வருவதை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இப்பொருள்களை அரசே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்து, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய முடிவு செய்து; 14.4.2007 முதல் சென்னை மாநகரத்திலும், 1.5.2007 முதல் ஏனைய மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது தற்காலிக சிறப்புத் திட்டம் எனினும், இத்திட்டத்திற்கு நுகர்வோரிடையே உள்ள வரவேற்பினை கருத்தில் கொண்டு இத்திட்டத்தினை 2008 ஜனவரி மாதம் வரை நீட்டிப்பதென்றும்; ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் பொருள்களுடன் “ஆட்டா”வையும் வழங்குவதென்றும்; துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்றவற்றை கால் கிலோ, அரை கிலோ என்று தேவைக்கேற்ப வழங்குவதென்றும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

*****

வெளியீடு — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9